www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi6M

**தென்காசி மாவட்டம்**

**தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2023**

-----

**வகுப்பு 6**

காலம்: 2.00 மணி **கணிதம்** மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) இரட்டை எண்களில் ஒரே பகா எண்
a) 4 b) 6 c) 2 d) 0

2) 9மீ 4 செ.மீ-க்குச் சமமானது
a) 94 செ.மீ b) 904 செ.மீ c) 9.4 செ.மீ d) 0.94 செ.மீ

3) தள்ளுபடி = குறித்தவிலை − ________.
a) இலாபம் b) விற்பனை விலை c) நட்டம் d) அடக்கவிலை

4) சமபக்க முக்கோணம் ஆனது ஒரு ________ ஆகும்.
a) விரிகோண முக்கோணம் b) செங்கோண முக்கோணம்
c) குறுங்கோண முக்கோணம் d) அசமபக்க முக்கோணம்

5) 2 நாள்கள் = ________ மணி.
a) 38 b) 48 c) 28 d) 40

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

6) 29 மற்றும் ________ ஆகிய எண்கள் இரட்டைப் பகா எண்கள் ஆகும்.

7) 45 மற்றும் 75ன் மீ.பெ.கா ________.

8) 50 கி.கி ÷ 100 கி = ________.

9) ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் ________.

10) இரு அடுத்தடுத்த இரட்டை எண்களின் மீ.பெ.கா. ________ ஆகும்.

**III. சரியா, தவறா எனக் கூறுக:** 5×1=5

11) இரு எண்களின் மீ.பெ.கா எப்போதும் அவற்றின் மீ.சி.ம-வின் காரணியாக இருக்கும்.

12) ஓர் எண்ணானது 6 ஆல் வகுபடும் எனில் அது 3 ஆலும் வகுபடும்.

13) மீனா 250 மி.லி மோர் வாங்கினாள். அது 2.50 லி-க்குச் சமம்

14) ஒவ்வோர் இயல் எண்ணும் பகா எண்ணாகவோ அல்லது பகு எண்ணாகவோ இருக்கும்.

15) இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை எனில் அடக்கவிலை > விற்பனைவிலை

**IV. பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 16) 11 : 50 | - | அசமபக்க முக்கோணம் |
| 17) 02 : 20 | - | 12 மணிக்கு 10 நிமிடங்கள் |
| 18) மூன்று பக்கங்கள் சமம் | - | செங்கோண முக்கோணம் |
| 19) ஏதேனும் ஒரு கோணம் செங்கோணம் | - | 2 மணி கடந்து 20 நிமிடங்கள் |
| 20) அனைத்து பக்கங்களும் வெவ்வேறானவை | - | சமபக்க முக்கோணம் |

**V. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 10×2=20

21) மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய மூன்றிலக்கப் பகுஎண்களை எழுதுக.

22) 128 என்ற எண்ணை காரணிச்செடி முறையில் பகாக் காரணிப்படுத்துக.

23) மீ.பெ.கா காண்க: 18, 24

24) 4 கி.மீ 300 மீ-இலிருந்து மீ ஆக மாற்றுக.

25) 38 மாதங்களை ஆண்டுகளாக மாற்றுக.

26) இராணி ஒரு சோடி வளையல்களை ₹ 310க்கு வாங்கினார். அவளுடைய தோழி அதை மிகவும் விரும்பியதால் இராணி அவ்வளையலை ₹ 325க்கு விற்கிறார் எனில் இராணி பெற்ற இலாபம் அல்லது நட்டம் காண்க.

27) பின்வரும் பக்க அளவுகளைக் கொண்டு முக்கோணம் அமைக்க இயலுமா? ஆம் எனில் அம்முக்கோணத்தின் வகையைக் குறிப்பிடுக.
10 செ.மீ, 8 செ.மீ, 5 செ.மீ

28) பாரி ஓர் உந்துவண்டியை ₹ 55,000க்கு வாங்கி ₹ 5,500 இலாபத்திற்கு விற்பனை செய்தார் எனில் உந்துவண்டியின் விற்பனை விலை என்ன?


29) தமிழகத்தின் ஆண்டு சராசரி மழைஅளவு 998 மி.மீ. இதனை சென்டிமீட்டரில் மாற்றுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




30) பக்கங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட முக்கோணங்களை அசமபக்க அல்லது இருசமபக்க அல்லது சமபக்க முக்கோணம் என வகைப்படுத்துக.




31) எவையேனும் மூன்று ஒற்றை இயல் எண்களின் கூடுதலானது ஓர் ஒற்றை எண்ணாகும். இந்தக் கூற்றை ஓர் எடுத்துக்காட்டுடன் உறுதிப்படுத்துக.

32) கீழ்க்காணும் எண்கணித கோவையை மரவுரு வரைபடமாக மாற்றுக: $8+(6\times2)$

33) பின்வரும் மரவுரு வரைபடத்தை இயற்கணிதக் கோவையாக மாற்றி எழுதுக.




**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: 5×3=15**

34) பகாக் காரணிப்படுத்தல் முறையில் மீ.சி.ம காண்க: 30, 40, 60

35) சரிதா தனக்கு 6 மீ 40 செ.மீ துணியும், தன்னுடைய தங்கைக்கு 3 மீ 80 செ.மீ துணியும் வாங்கினாள். அவள் வாங்கிய துணியின் மொத்த நீளம் எவ்வளவு?

36) கீழ்க்கண்டவற்றை ஒப்பிட்டு (>, < அல்லது =) குறிப்பிடவும்.

i) 800 கி + 150 கி ☐ 1 கி.கி

ii) 600 மி.லி + 400 மி.லி ☐ 1 லி

iii) 55 கி ☐ 550 மி.கி

37) கீழ்க்கண்டவற்றை 24 மணிநேர அமைப்புக்கு மாற்றுக.

a) 3.15 மு.ப b) 12.35 பி.ப c) 12.00 நண்பகல்


38) வளர்மதி தன்னுடைய முத்து மாலையை ₹ 30,000க்கு விற்பனை செய்து அதனால் இலாபம் ₹ 5,000 பெறுகிறார் எனில் முத்து மாலையின் அடக்கவிலையைக் காண்க.

39) $\Delta ABC$ல் பின்வருவனவற்றுக்குப் பெயரிடுக.

i) மூன்று பக்கங்கள் _________, _________, _________.

ii) மூன்று கோணங்கள் _________, _________, _________.

iii) மூன்று முனைகள் _________, _________, _________.




40) பின்வரும் கோண அளவுகளைக் கொண்டு முக்கோணம் அமைக்க இயலுமா? ஆம் எனில் அம்முக்கோணத்தின் வகையைக் காண்க.

(i) $90^\circ, 55^\circ, 35^\circ$ (ii) $60^\circ, 40^\circ, 42^\circ$

41) கீழ்க்காணும் எண்கணிதக் கோவையை மரவுரு வரைபடமாக மாற்றுக.

$(3\times5)-(4\div2)$

**VII. ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்: 1×5=5**

42) AB = 7 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைந்து கோட்டுத்துண்டின் மீது P என்ற புள்ளியைக் குறிக்கவும். P வழியே AB கோட்டுத்துண்டிற்குச் செங்குத்துகோடு வரைக.

43) 7.8 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைக. கோட்டுத்துண்டிற்கு மேலே 5 செ.மீ தூரத்தில் B என்ற புள்ளியைக் குறிக்க. B வழியே கோட்டுத்துண்டிற்கு இணைகோடு வரைக.

---------

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com